செ.வெ.எண்.644 நாள்: 30.07.2010

**ஐ.எஸ்.ஐ முத்திரை இல்லாத தரமற்ற மின்பொருட்கள் பறிமுதல்**

தமிழ்நாட்டில் அவ்வப்போது ஆங்காங்கே தரமற்ற மின் பொருட்கள் உபயோகிப்பதால் சில விபத்துக்கள், உயிரிழப்புகள் மற்றும் பெருத்த பொருட்சேதங்கள் ஏற்படுகின்றன. இதற்கு முக்கிய காரணம் மக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லாததே. இவ்வாறான விபத்துக்களைத் தவிர்க்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகிறது.

தரமில்லாத மின்பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த புகார்களின் அடிப்படையில் தொழில் வணிகத்துறை இயக்ககம், 21.7.2010 மற்றும் 27.7.2010 ஆகிய நாட்களில் தமிழ்நாடு முழுவதும் திடீர் ஆய்வு மேற்கொண்டது. இந்த திடீர் ஆய்வு அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட தொழில் மைய அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது. இதில் சுமார் 130 அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஐ.எஸ்.ஐ முத்திரை கட்டாயமாக்கப்பட்ட மின்பொருட்களில், ஐ,எஸ்.ஐ முத்திரை இல்லாமல் விற்பனை செய்வதைத் தடுக்கும் வகையில் மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சுமார் 150க்கும் மேற்பட்ட மின் மற்றும் மின்னணுப் பொருட்கள், வீட்டு உபயோக மின் சாதனங்களின் விற்பனைக்கூடங்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் ஐ,எஸ்.ஐ முத்திரை இல்லாமல் தயாரித்து விற்பனைக்கு வைக்கப்பட்ட வயர்கள், இம்மர்ஷன் வாட்டர் ஹீட்டர்கள், இஸ்திரிப் பெட்டிகள், சுவிட்சுகள், சி.எப்.எல் பல்புகள் போன்ற 1,075 பொருட்கள் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் தோராய மதிப்பு ரூ. 1,65,737/– ஆகும். மேற்படி தரமற்ற பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த கடை உரிமையாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுபோன்று ஏற்கெனவே மாநிலம் தழுவி நடத்திய திடீர் ஆய்வில் ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத 2,187 பொருட்களை விற்ற 99 வியாபாரிகள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் குற்றம் சாற்றப்பட்ட இரண்டு வியாபாரிகள் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு நீதிமன்றம் ஒவ்வொரு வியாபாரிக்கும் தலா ரூ.50,000/ அபராதம் விதித்துள்ளது.

இந்த நடவடிக்கை, மாநிலம் முழுவதும் தொடர்ந்து நடைபெறும். பொதுமக்களின் உயிர், உடமை போன்றவற்றினைப் பாதுகாக்கும் வகையில் மக்களிடையே தரமான மின் பொருட்களையே வாங்கி உபயோகப்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கம். தரமற்ற மற்றும் ஐ.எஸ்.ஐ. முத்திரையில்லாத மின்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட மாவட்ட தொழில் மையத்திற்கோ அல்லது தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்திற்கு (044) 28548173 என்ற தொலைபேசி எண்ணிற்கோ அல்லது துணை இயக்குநர் (மின்சாரம் மற்றும் மின்னணு), தரக்கட்டுப்பாடு ஆணை செயலாக்க மையம், திருவான்மியூர் அவர்களுக்கு (044) 22542036 என்ற தொலைபேசி எண்ணிற்கோ தகவல் தெரிவிக்கும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம்
(கோ.சுந்தரமூர்த்தி)
தொழில் ஆணையர் மற்றும்
தொழில் வணிகத்துறை இயக்குநர்

<u>வெளியீடு:</u>

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை தலைமைச் செயலகம், சென்னை-9.